## மாநகராட்சிகள் – நகராட்சிகளில்

# மாடுகள் - நாய்கள் தொல்லைகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை தேவை!

## சட்டப் பேரவையில் – கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 16-

சட்டப் பேரவையில் கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**க.அன்பழகன்:** கும்பகோணம் மாநகராட்சி உருவானதற்குப்பிறகு அருகாமையில் இருக்கிற தாராசுரம் பேரூராட்சியை இணைத்திருக்கிறோம். அந்த தாரசுரத்திற்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு அமைச்சருடைய அறிவிப்பின்படி 39 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே 10 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தொடங்கும் நிலையில் இருக்கிறது. மீதமுள்ள 29 கோடி ரூபாய்க்கும் நிதியாணை வழங்கி, நிதி அளித்திருப்பதால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக 1,780 கோடி ரூபாய்க்கு நாகப்பட்டினத்திற்குச் சென்றிருக்கிற அந்த வகையில் கும்பகோணம் பகுதியில் இருக்கிற தேனாம்படுகை, பட்டீஸ்வரம், சுந்தரபெருமாள் கோயில், உடையாலூர் போன்ற இந்தப் பகுதி சாலைகளெல்லாம் பைப்புகள் போடப்பட்டதற்குப் பிறகு பழுதடைந்திருக்கிறது. அது சேறும் சகதியுமாக இருக்கிறது. அதை அமைச்சருடைய கவனத்திற்குச் சொல்லி அதை விரைவாக சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து உறுப்பினர்களுக்காகவும் இருக்கிற ஒரேயொரு கேள்வி. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மிகப் பெரிய பிரச்சினை மாடுகள் தொல்லை, நாய்கள் தொல்லை எல்லா நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் இருக்கின்றன. பல நேரங்களில் மாடுகளால் 2 சக்கர வாகனங்களில் சென்று பலர் மண்டை உடைகிறார்கள். கை, கால் உடைகிறது. சிலர் மரணம்கூட அடைகிறார்கள். இந்த மரணத்தைத் தவிர்ப்பதற்கு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை



கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என்.நேரு:** உறுப்பினர் அவர்கள் சொன்னது, நேற்றுகூட நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே 3 இடங்களிலே நாய்க்கு கருத்தடை செய்கிற அந்த அலுவலக இடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் இதைச் செய்கிறோம். பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அதை எடுத்து முற்றிலுமாக ஒழிப்பதற்கு வழியில்லை. மாடுகளைப் பொறுத்தளவில் பட்டியிலே அடைத்து அதற்கு அபராதம் விதிக்கிற போது பொதுமக்கள் வந்து எங்கள் மாட்டை ஏன் நீங்கள் பிடித்தீர்களென்று மிகவும் கோபப்படுகிறார்கள். சென்னையிலே 10, 15 முறை பிடித்துவிட்டோம். ஆனால், மறுபடியும் திரும்பவும் மாடுகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, தொடர்ந்து மாநகராட்சி ஊழியர்கள் அந்தப் பணியை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, நாய்கள் தொந்தரவு என்பது எல்லா இடங்களிலும் மிக அதிகமாக இருக்கிறது. துறையினுடைய அனைத்து ஆணையர் பெருமக்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில் கொண்டு விரைவாக அதையெல்லாம் பட்டியில் அடைத்தால் நீங்கள், சட்டமன்ற உறுப்பினர் நாளைக்கு வந்து இதை விடுங்கள் என்று சொல்லாமல் இருந்தீர்களென்றால், உடனடியாக அதை நாங்கள் பிடித்துவிடுவோம். மாட்டைப் பிடித்து பட்டியில் அடைத்தால் நீங்கள் உடனே வந்து விடுங்கள் என்று சொன்னால் அது எப்படி சரியாக இருக்கும் என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.




சேலம் மாநகரம் அம்மாபேட்டை பகுதி தி.மு.க. சார்பில். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு பேசினார். பகுதி கழக செயலாளர். கே.டி.ஆர். தனசேகரன் வரவேற்புரையும். மாவட்டக் கழகச் செயலாளர். இரா. இராஜேந்திரன் தலைமையுரை ஆற்றினார் மற்றும் தலைமை கழக பேச்சாளர். ச.நாகராஜ். மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே .சுபாசு. மு.கார்த்திகேயன், தலைமை செயற்குழு, சி.ராஜேந்திரன், தாமரைக்கண்ணன், தெற்கு தொகுதி பொறுப்பாளர். பார். இளங்கோவன்,' மாநகர கழக நிர்வாகிகள். பா.ரகுபதி. கே.ஆர். முருகன். வி.கணேசன் கோமதி, பொதுக்குழு. உறுப்பினர்கள். பூபதி, சா.சுப்பிரமணி,லோகநாதன். பாரதிராஜா, குமாரசாமி. மஞ்சுளா ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

## கல்வராயன் மலையில்

# புதிய பேருந்து பணிமனை அமைத்திடுக!

## பேரவையில் சங்கராபுரம் தா.உதயசூரியன் கோரிக்கை!

சென்னை, டிச. 16 -

சங்கராபுரம் தொகுதி கல்வராயன் மலையில் புதிய பேருந்து பணிமனை அமைத்திட வேண்டும் என்று பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் தா. உதயசூரியன் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**தா. உதயசூரியன்:** 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற சிறப்பான திட்டத்தின் மூலமாகக் கேட்கப் பட்ட 10 கோரிக்கைகளில், ஒரு கோரிக்கையான சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் பேருந்து பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருந்தது. 'விடியல் பயணம்' திட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியில் பல்லாயிரக்கணக்கான மகளிர் பயன் பெற்று கொண்டிருக்கின்ற இந்த நல்லவேளையில், மலைப் பகுதிகளில் இருக்கின்ற மகளிருக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. சென்றமுறை முதல்வர் அவர்கள் அந்தக்



கருத்துரு படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள்.

ஆகவே, வெள்ளிமலையின் கல்வராயன் மலையில் ஒரு புதிய பேருந்து பணிமனையை உருவாக்கித் தருகின்றபோது, அங்கிருக்கக் கூடிய மலைவாழ் பழங்குடியின மக்கள் இந்த விடியல் பயணத் திட்டத்திலும் பயன் பெறுவார்கள். ஆகவே, வெள்ளிமலையிலிருந்து சின்ன திருப்பதிக்கு செல்வதற்கு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமாக இப்போது 34 கிலோ மீட்டர் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தச் சாலையும் போடப்படவிருக்கிற இந்த நல்ல வேளையில், அந்தப் போக்குவரத்துப் பணிமனையை இந்த நிதியாண்டிலேயே உருவாக்கித் தருவதற்கு போக்குவரத்துவத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் உதயசூரியன் அவர்கள் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வைத்து வருகிறார். மலைப் பகுதியில் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான இலவசப் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டு, அது உதகமண்டலத்திலே துவக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியாக, படிப்படியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. உறுப்பினர் கோரிய அந்தப் பகுதியிலும் அந்தச் சேவை துவக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் மலைப் பகுதி முழுவதிற்கும் தேவையென்றால், அங்கே ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். காரணம் அங்கே இயங்குகின்ற பேருந்துகள் ஆத்தூரிலிருந்தும், சின்ன சேலம் பணிமனையிலிருந்தும் இயக்கப்படுகின்றது. அங்கே அந்தப் பணிமனை அமைப்பதற்கு போக்குவரத்துக் கழகத்தில் இருக்கின்ற நிதிநிலை இடம் கொடுக்காதபோது, அவர் என்னிடத்திலே தனிப்பட்ட முறையில் கொடுத்த வாக்குறுதிசட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலும், நமக்கு நாமே திட்டத்தின் மூலமாக அந்தப் பணிமனை அமைப்பதற்கான அடிப்படை பணிகளை செய்வேன் என்று சொன்னார்.

ஏற்கெனவே நம்முடைய ஊரக, உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள், அதேபோன்று தன் பொறுப்பிலே அந்த நிதியை ஏற்பாடு செய்து, அவருடைய ஆத்தூர் தொகுதியில் பணிமனை அமைப்பதற்கு கோரிக்கை வைத்து, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பணியை அவர் செய்து வருகிறார்.

அதேபோல், உதயசூரியன் அவர்களும் இதற்கான நிதிகளை ஏற்பாடு செய்தால், நிச்சயமாக அதனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கடலூர் மாவட்டம் – வீராணம் ஏரியின்

# நீர்வழித் தடங்களில் ஏற்பட்ட மழைப் பாதிப்புகள் ஆய்வு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டார்!

கடலூர், டிச.16-

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், வீராணம் ஏரியின் நீர்வழித்தடங்களில் ஏற்பட்ட மழைப்பாதிப்புகள் குறித்து லால்பேட்டை பகுதியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன் ஆகியோர் முன்னிலையில் அன்று 13.12.2024 பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வீரானந்தபுரம் மற்றும் கண்டமங்கலம் பகுதியில் விளைநிலங்களில் வெள்ளநீர்சூழ்ந்துள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு கடலோர மாவட்டங்களில் கடும்மழைப்பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்ததை தொடர்ந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வீராணம் ஏரி அருகே தாழ்வானப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் நிவாரண முகாம்களுக்கோ அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஒலிப்பெருக்கியின் வாயிலாக அறிவிக்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக (12.12.2024 மற்றும் 13.12.2024) வீராணம் ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளான காட்டுமன்னார்கோயில், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட இடங்களில் சுமார் 41 செ.மீ அளவில் கனமழை பெய்துள்ளது. இதன் காரணமாக நீர்வரத்து திடீரென அதிகரித்துள்ளது. ஏற்கனவே, வடகிழக்கு பருவமழை முன்னிட்டு வீராணம் ஏரியிலிருந்து படிப்படியாக நீர் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், தற்போது பெய்த கனமழையின் காரணமாக கூடுதலான தண்ணீர் வந்ததாலும், வீராணம் ஏரியில் அதன் முழுக்கொள்ளவு 47.5 அடியில் நேற்றைய தினம் 46.75 அடி உயரத்திற்கு எட்டியுள்ளது.

இதன் காரணமாக பாதுகாப்பு கருதி வீராணம் ஏரிக்கு அருகிலிருந்த குடியிருப்பு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு முறையாக 6 முறை அறிவிப்பு வெளியிடப்பட்டு, வி.என்.எஸ் மற்றும் வெள்ளியங்கால் மதகுகளின் வழியாக பாதுகாப்பான முறையில் சிறிது சிறிதாக நீரின் அளவு உயர்த்தப்பட்டு 18,000 கனஅடி வெளியேற்றப்பட்டது.

மேலும், தொடர்மழையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீராணம் ஏரியானது தினந்தோறும் அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, நீரின் அளவு குறைக்கப் பட்டுவருகிறது.

காட்டுமன்னார்கோயில் வட்டம், லால்பேட்டை பகுதியில் முறையான அறிவிப்பு தெரிவிக்கப்பட்டதன் வாயிலாக அனைத்து பொதுமக்களும் வெளியேற்றப்பட்டு, வெள்ளநீர் பாதுகாப்பான முறையில் வெள்ளியங்கால் ஓடை வழியாக வீராணம் ஏரியிலிருந்து வெளியேற்றப் பட்டு வருகிறது.

பெஞ்சல் மற்றும் தென்பெண்ணையாற்று வெள்ளப்பெருக்கின் காரணமாக சுமார் 3,59,315 ஹெக்டர் விளைநிலங்கள் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. தற்போது மழைநீர் வடிந்த பிறகு சேதங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படும்.

வீராணம் ஏரி அருகில் உள்ள பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ள இடங்களில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு 350 குடும்பங்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அங்கு 15,000 நபர்களுக்கு தேவையான உணவு வழங்கப்பட்டது.

மழைநீர் சூழ்ந்த பகுதிகளில் உடனடியாக தண்ணீரை வெளியேற்றி, மின்சாரம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துதர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வின் போது மாவட்ட கண்காணிப்பு அலுவலர் இரா.இராஜாராம், செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) காந்தரூபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர்.எம்வீடி.கோபால் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் 500க்கும் மேற்பட்டோருக்கு வேட்டி,சேலை மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி,பாலக்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் எண்ணமங்கலம் ஊராட்சி ED 1268 எண்ணமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் 15 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கிடங்கை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் திறந்து வைத்தார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி மாணிக்கம் முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் செந்தில்குமார், பெரியசாமி, சதாசிவம், செலம்பண்ணன், ரமேஷ், அருள், மாதன், பெருமாள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர இளைஞர் அணி சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. வழங்கினர்!

தஞ்சாவூர், டிச.16-

கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார்பாக, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாநகர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட்டில், 47 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தியும், 47 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களுடன் புத்தக பையும் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கியதுடன் அனைவருக்கும் அறுசுவை மதிய உணவும் பரிமாறி கொண்டாடப் பட்டது.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார்பில், மாநகர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட்டில், பச்சையப்பா தெருவில் அமைந்துள்ள பாலாஜி மஹாலில் கும்பகோணம் மாநகர திமுக செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் தலைமையில் ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலில், பள்ளி மாணவ மாணவியர்கள் 47 பேருக்கு கல்வி உபகரணங்களுடன் புத்தகப்பையும், தொடர்ந்து 47 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. பிறகு, 47 கர்ப்பிணி பெண்களுக்கு மலர் மாலை அணிவித்து, கையில் கண்ணாடி வளையல்கள் அணிவித்து, சந்தனம் பூசி, நலுங்கு வைத்து, ஆசிர்வாத திலகமிட்டு, வளைகாப்பு நடத்தி அவர்களுக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கப் பட்டது.

இதனைத்தொடர்ந்து கண் தானம் செய்ய பதிவு செய்த 47 நபர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது. பின்னர் தூய்மை காவலர்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை மதிய உணவும் பரிமாறப்பட்டது.

இந்நிகழ்வில், மாநகர திமுக நிர்வாகிகள், இளைஞரணியினர் உள்ளிட்ட அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும், மாநகராட்சி மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிடமாடல் ஆட்சியில் விளையாட்டுத் துறையை உலகளவில் முன்னேற்றிக் கொண்டிருக்கும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளையும், உதவிகளையும் பெற்று கடந்த 2024 ஜீலை மாதம் திருப்பூரில் நடைபெற்ற முத்தம்மாள் நினைவு கேரம் போட்டிகளின் போது கசிமா அவர்களுக்கு அமெரிக்க போட்டியில் பங்கேற்க ரூ.1 லட்சம் ஊக்கத்தொகை வழங்கி உற்சாகமூட்டியதை தொடர்ந்து நவம்பர் மாதம் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் நடைபெற்ற Carrom World Cup போட்டியில் பங்குபெற்று உலக கேரம் சாம்பியன் பட்டத்தை வென்று நமது தமிழ்நாட்டிற்கும் இந்திய திருநாட்டிற்கும் பெருமை சேர்த்த செல்வி.கசிமா முத்தம்மாள் அறக்கட்டளை நிறுவனர், வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜிடம் வாழ்த்துப் பெற்றார். உடன் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் ஆகியோர் உள்ளனர்.




நாமக்கல் மாநகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 6 விரைவு நகர பேருந்துகளை மகளிர் விடியல் பயணம் பேருந்துகளாக மாற்றி அமைத்து, மகளிர் விடியல் பயண சேவையை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மகளிர் விடியல் பயண சேவையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, மேயர் து.கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர் ஒன்றிய செயலாளர் நவலடி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.